செ.வெ.எண்:37 நாள்:15.11.2021

**மத்திய அரசால் சமூக நலன் மற்றும் தேசிய வளர்ச்சிக்கான பணிகளை சிறப்பாக செய்து வரும் இளைஞர்களது பணியை அங்கீகரிக்கும் பொருட்டு, 2019-2020ஆம் ஆண்டிற்கான "தேசிய இளைஞர் விருது" வழங்குதல் - நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள இளைஞர்கள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர்டாக்டர். அ.அருண்தம்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

தேசிய அளவிலான இளைஞர் விழாவில் மத்திய அரசால் சமூக நலன் மற்றும் தேசிய வளர்ச்சிக்கான பணிகளை சிறப்பாக செய்து வரும் இளைஞர்களுக்கும் (15 வயது முதல் 29 வயது வரை) மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கும் தேசிய இளைஞர் விருது வழங்கப்பட்டு வருகிறது. 01.01.2018 முதல் 31.12.2020 வரையிலான காலங்களில் கலாச்சாரம், இளைஞர் மேம்பாட்டு பணி, சுகாதாரம், ஆராய்ச்சி, மனித உரிமைகள், கலை மற்றும் இலக்கியம், சுற்றுலா, பாரம்பரிய மருத்துவம், சமூக சேவை, விளையாட்டு மற்றும் கல்வி போன்ற சமூக நலனில் சிறப்பாக தொண்டாற்றி தேர்வு செய்யப்படும் நபர்களுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளது. **தகுதிகள் : இளைஞர்கள் (தனிநபர்)** 1. இந்திய குடிமகனாக இருத்தல் வேண்டும். 2. 15 வயது முதல் 29 வயது ஜனவரி 1-ம் தேதி 2021 அன்று பூர்த்தியாக இருத்தல் வேண்டும். 3. சமூக பணியில் அதிக ஆர்வம் மற்றும் சமூக பணியாற்றி இருக்க வேண்டும். வாழ்நாளில் ஒரு முறை மட்டுமே இந்த விருது வழங்கப்படும். 4. மத்திய / மாநில / பல்கலைக் கழகங்கள் மற்றும் இதர அரசு நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் இந்த விருது பெற விண்ணப்பிக்க இயலாது. தனிநபருக்கான தேசிய இளைஞர் விருது ரூ.1,00,000/- ரொக்கம், பாரட்டுப் பத்திரம் மற்றும் பதக்கம் வழங்கப்படும். **தன்னார்வ தொண்டு நிறுவனம்** : 1. பரிவு துறை சட்டம் 1860-ன்படி கடந்த மூன்றாண்டுக்கு அமைப்பு தொடர்பான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். 2. நிர்வாக குழுவின் அதிகாரங்கள் அமைப்பு விதிகளில் குறிப்பிட்டிருக்க வேண்டும். 3. சமூக நலன் சார்ந்த திட்டங்களை அறிவார்ந்த தன்மையுடன் மேம்படுத்த தன்னார்வத்துடன் ஈடுபடும் தகுதியை பெற்றவர்களாக இருக்க வேண்டும். 4. எந்தவித லாப நோக்கத்துடனும் தொண்டு பணிகள் ஆற்றியிருக்கக் கூடாது. 5. குறிப்பிட்ட சாதி, சமய அடிப்படையில் தொண்டாற்றிய நிறுவனங்கள் இவ்விருதுக்கு விண்ணப்பிக்க இயலாது. 6. இதற்கு முன் இவ்விருது பெற்ற தொண்டு நிறுவனங்கள் இதற்கு விண்ணப்பிக்க இயலாது. 7. குறைந்த பட்சம் 3 ஆண்டுகளாவது இளைஞர்களை சமுதாய பணிகளில் ஈடுபடும் வகையில் சிறப்பான சேவை ஆற்றி இருத்தல் வேண்டும். 8. சமுதாய பணிகளில் ஈடுபட்டு தொண்டாற்றிய புகைப்படம் மற்றும் செய்திக்குறிப்பு மற்றும் இதர ஆவணங்களுடன் சான்றொப்பமிட்ட ஆதாரங்கள் இணைக்கப்பட வேண்டும். தன்னார்வ

தொண்டு நிறுவனங்களுக்கான தேசிய இளைஞர் விருது ரூ.3,00,000/- ரொக்கம், பாராட்டுப் பத்திரம் மற்றும் பதக்கம் வழங்கப்படும். எனவே, சமூக நலனில் சிறப்பாக தொண்டாற்றிய இளைஞர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் மேற்கண்ட விருதுகளுக்கு

17.11.2021-க்குள் https://innovate.mygov.in/national-youth-award-2020 என்ற இணையதள முகவரியில் உரிய ஆதார ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் மற்றும் உரிய ஆதார இணைப்புகளுடன் 3 நகல்கள் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், நாகப்பட்டினம் அவர்களிடம் எதிர்வரும் 16.11.2021 மாலை 5.30 மணிக்குள் நேரடியாக சமர்ப்பிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு நாகப்பட்டினம், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் கைபேசி :7401703497 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என **மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். அ.அருண்தம்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.**

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**